எம்.சி.ஓ.பி. எண்: 8072/2018 தேதி : 4.10.2024

ம.சா. : 1
பெயர் : திரு. சுனில் குமார்
த/பெ. : திரு. ராமன்
வயது : 48

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னால் எதிர்மனுதாரருக்க சார்பு செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது மகன் சார்பாக தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் இருசக்கர வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வருமான வரி சான்று மசாஆ 9 ஆவணம் 2017–2018 மற்றும் 2018–2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 2017–2018 வரிமான வரி அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. 2017–2018 ல் ரூ.9,00,000/– வரிமான வரி கட்டி உள்ளேன். 2018–2019 ரூ.8,76,000/– கட்டி உள்ளேன். மசாஆ 9 ஆவணத்தில் 2017–2018 வரிமான வரி Balance sheet–ல் எவ்வளவு காட்டபட்டுள்ளது என்றால் நான் வரிமான வரி செலுத்தியதில் முன்னால் உள்ள பக்கத்தை வைத்து கூறியுள்ளேன். Balance sheet–ஐ வைத்து தான் வருமான வரி கட்டுவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மசாஆ 9 ஆவணத்தில் 2018–2019 வரிமான வரி Balance sheet–ல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். இதில் எவ்வளவு தொகை காட்டப்பட்டுள்ளது என்றால் ரூ.83,89,625/– turn over–ஆக காட்டப்பட்டுள்ளது. விபத்திற்கு பிறகு அதிக turn over காட்டப்பட்டுள்ள காரணத்தினால் நான் அதிகம் சம்பாதித்துள்ளேன் என்றால் சரியல்ல. 28.5.2018–ல் விபத்து நடந்தது. 31.3.2018–ல் Balance sheet தயார் செய்த தேதி 31.7.2017. இந்த ஆவணம் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மசாஆ 9 ஆவணத்தில் இரணடு பெங்களூர் முகவரி காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் எல்லாம் அதிக இழப்பீடு பெறுவதற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் முதலாவது தாக்கல் செய்த விபத்து பதிவேட்டு நகலில் காணப்படும் காயங்களை தவிர்த்து வேறு எலும்பு முறிவு மற்றும் காயங்கள் இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன பரிசோதனைக்கு நான் சென்ற இருசக்கர வாகனம் உட்படுத்தப்பட்டதா என்றால் ஆமாம். அந்த ரிப்போர்ட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.